**Minutes of Public Hearing conducted on 02.12.2025 at 12.00 noon at Hindu Nadar Uravin Murai Thirumana Mandapam, Keelasurandai, V.K Pudur Taluk, Tenkasi District with respect to the proposed Rough Stone and Gravel Quarry by Thiru. S.Subramanian, over an extent of 4.41.00 Hectares at S.F. No. 16/7, 16/8, 16/9, 16/10, 16/11B (P), 16/11C, 16/12, 16/13, 16/14, 17/1, 19/8, 19/9, 19/10 and 19/11, Melakalangal Village, V.K Pudhur Taluk, Tenkasi District.**

**Details of participants in this meeting.**

| | | |
|---|---|---|
| 1. | Thiru. S.Muthuramalingam | District Backward Classes and Minorities Welfare Officer,<br>Tenkasi. |
| 2. | Tmt. S.R. Sangeeta | District Environmental Engineer (FAC),<br>Tamilnadu Pollution Control Board,<br>Tenkasi. |
| 3. | Thiru. M.Tamizh Selvan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tenkasi. |
| 4. | Selvi. M. Shanmugasree Revathi | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tenkasi. |
| 5. | Deputy Tahsildar, Veerakeralam Pudur Taluk, Tenkasi District. | |
| 6. | Public and Government Officials | Details are enclosed vide Annexure - II |

The Public hearing under EIA Notification, 2006 for the proposed project of Rough Stone and Gravel Quarry by Thiru. S.Subramanian, over an extent of 4.41.00 Hectares at S.F. No. 16/7, 16/8, 16/9, 16/10, 16/11B (P), 16/11C, 16/12, 16/13, 16/14, 17/1, 19/8, 19/9, 19/10 and 19/11 of Melakalangal Village, V.K Pudhur Taluk, Tenkasi District was conducted on 02.12.2025 at 12.00 noon at Hindu Nadar Uravin Murai Thirumana Mandapam, Keelasurandai, V.K Pudur Taluk, Tenkasi District.

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tenkasi, welcomed the District Backward Classes and Minorities Welfare Officer, Tenkasi, Government officials, industry representatives and the public. She informed that public notices were already published in "Dinamalar" Tamil edition & "The New Indian Express" English edition newspapers on 25.10.2025 and also announcement regarding public hearing was made to the public / villagers located in closer proximity of proposed quarry site through vehicle announcement and distributing pamphlets.

She informed that the Environmental Consultant will present the technical details of the proposed project on behalf of the Project proponent and then the public can express their views on the proposed project verbally after introducing themselves. She also stated that the public can express their opinion in writing also, and that the public hearing is being recorded through videography.

The District Backward Classes and Minorities Welfare Officer, Tenkasi added that this Public hearing was actually scheduled to be chaired by the Sub collector, Tenkasi and due to sudden video conference meeting scheduled by the Election Commission of India, the Sub Collector, Tenkasi could not attend the public hearing. He also stated that as per the District Collector's instruction, he chaired the public hearing on behalf of the Sub Collector, Tenkasi. He also stated that public may express their views in front of the stage after the presentation.

Then the Environmental Consultant explained in detail about the proposed project of Thiru. S.Subramanian Rough stone and Gravel quarry to the public through a power point presentation. Subsequently, the public started expressing their views as follows:

1. **Thiru. Antonysamy, 6th Ward Panchayat Councillor, Vadiyur**

   He stated that in this area lives a large number of construction workers. The rough stones and M-sand required by the people can be transported in small vehicles for those living within a 10 km radius of the proposed project and this will reduce expenses. He also added that the project area is rain fed land. Therefore, if permission is granted for this project, the people of this area will benefit greatly.

2. **Thiru. Ramkumar, Building contractor, Pavoorchathiram**

   He stated that he was engaged in construction work around the villages surrounding the proposed quarry site. At present, a large amount of money is being spent because the required raw materials for building work have to be brought from faraway places. If permission is granted for the proposed quarry, the prices of raw materials will get reduced, and will get profit. Therefore, he requested that approval shall be granted for the above project

3. **Thiru. Arunachalam, Melakalangal**

He said that his village lands are rain fed lands. Therefore, all the villagers are willing to have a rough stone quarry established here. He also stated that when raw materials are brought from other faraway places, they have to be purchased at a higher cost. If a stone quarry is set up here locally, then the raw materials can be bought at a lower price. Hence, he requested that permission shall be granted for the proposed stone quarry.

4. **Thiru. Perumal Raj, Shenkottai, Civil Engineer**

He stated that he has been constructing many buildings in and around the Surandai area, and there is often a shortage of raw materials. If this quarry is established, raw materials will be easily available. He also mentioned that the public will not have to go to other places for work. Since there are no job opportunities locally, most people are currently going outside the area and staying there for work. If the quarry is set up locally, it will be very useful for them.

5. **Thiru. MuthuDurai, Melakalangal**

He stated that his native village is Melakkalangal. Now to fulfil the requirement of raw materials, they had to go to Surandai Village, Sankarankovil to buy the same. Now, since a stone quarry is going to be established in their own village, it will be beneficial for them. Therefore, if approval is granted for the proposed rough stone quarry, the standard of living in their area will improve.

6. **Thiru. Petchimuthu, Karaiyalanur**

He stated that he was a labourer for many years. He further said that establishing a quarry here will benefit many workers like him and it will also improve the livelihood of the villagers.

7. **Tmt. Mageshwari, Karaiyalanur**

She said that if the above mentioned quarry is established in their area, the livelihood of poor people like her will improve. Therefore, she requested that permission be granted for setting up the above said quarry.

Then, the District Backward Classes and Minorities Welfare Officer, Tenkasi requested to submit the written petitions. A total of about 124 petitions were received

during the public hearing. Then the Deputy Thasildhar, V.K Pudhur asked the public to submit their opinion in writing if any with them and to express their opinion verbally, if any.

As no public came forward to record their views, after expressing thanks to everyone the meeting came to an end.

11/12/25

**District Environmental Engineer(FAC),**
**TamilNadu Pollution Control Board,**
**Tenkasi**

11/12/25

**District Backward Classes and Minorities Welfare Officer,**
**Tenkasi.**

**Annexure:**

1. Press release Notice (Tamil & English) **( Annexure I )**
2. Copy of Attendence (Total - 14 Pages, 137 Participants) **( Annexure II )**
3. Pendrive consisting of the Recorded Video of the entire public hearing. **(Annexure III )**
4. Written Petition received from the public for this proposed Project-124 Nos **(Annexure IV )**
5. Written Petition received from the public to this office for this proposed Project-1 No **( Annexure V )**

**தென்காசி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம், மேலக்கலங்கல் கிராமம், புல எண்கள். 16/7, 16/8, 16/9, 16/10, 16/11B(P), 16/11C, 16/12, 16/13, 16/14, 17/1, 19/8, 19/9, 19/10 மற்றும் 19/11-ல் விஸ்தீரணம் 4.41.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு.S. சுப்பிரமணியன் அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குறித்து 02.12.2025 அன்று நண்பகல் 12.00 மணியளவில், தென்காசி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம், கீழச்சுரண்டை கிராமம், தி/ள். இந்து நாடார் உறவின்முறை திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்**

1. திரு. சு.முத்துராமலிங்கம் - மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தென்காசி. (மாவட்ட ஆட்சியரின் உத்திரவின்படி)
2. திருமதி. S.R. சங்கீதா - மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(முழு கூடுதல் பொறுப்பு), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி
3. திரு. மு. தமிழ் செல்வன் - உதவி பொறியாளர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி
4. செல்வி. மு. சண்முகஸ்ரீ ரேவதி - உதவி பொறியாளர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி
5. துணை வட்டாட்சியர், வீரகேரளம்புதூர் வட்டம், தென்காசி மாவட்டம்.
6. பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் (விபரம் இணைக்கப்பட்டுள்ளது -இணைப்பு II)

*****

தென்காசி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம், மேலக்கலங்கல் கிராமம், புல எண்கள். 16/7, 16/8, 16/9, 16/10, 16/11B(P), 16/11C, 16/12, 16/13, 16/14, 17/1, 19/8, 19/9, 19/10 மற்றும் 19/11-ல் விஸ்தீரணம் 4.41.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு.S. சுப்பிரமணியன் அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரிக்கு

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ன் கீழ் அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது, தென்காசி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம், கீழச்சுரண்டை கிராமம், தி/ள். இந்து நாடார் உறவின்முறை திருமண மண்டபத்தில் வைத்து 02.12.2025 அன்று நண்பகல் 12.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி அவர்கள் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தென்காசி அவர்களையும் அரசு அதிகாரிகளையும், மற்றும் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு பங்கேற்று கருத்துக்களை தெரிவிக்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றார். பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து, ஏற்கனவே 25.10.2025 நாளிட்ட "தினமலர்" மற்றும் "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தாகத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் தொடர்பாக பொதுமக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு, குவாரி அமையும் இடத்தினை சுற்றியுள்ள கிராம மக்களுக்கு, துண்டு பிரசுரங்கள், வாகன பிரச்சாரம் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டிருந்தாகவும் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பான விளக்கங்களை, மேற்படி நிறுவனம் சார்பில் அவர்களின் சுற்றுச்சூழல் ஆலோசகர் பொதுமக்களிடம் விளக்குவார்கள் எனவும், அதனைத் தொடர்ந்து, பொதுமக்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விபரமாக தெரிவித்து, கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்துப்பூர்வமாகவும் தரலாம் என்றும் தெரிவித்தார். மேலும் இக்கருத்துக்கேட்புக் கூட்டம் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பேசிய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தென்காசி அவர்கள், இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது தென்காசி சார் ஆட்சியர் தலைமையில் நடைபெறுவதாக இருந்தது எனவும், இன்று நடைபெற உள்ள வாக்காளர் சிறப்பு காணொலியில் சார் ஆட்சியர் அவர்கள் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால், மாவட்ட ஆட்சியரின் ஆணையின்படி தாம் இந்த கூட்டத்தை தலைமை ஏற்று நடத்துவதாக தெரிவித்தார். மேலும் இக்கூட்டம் தொடர்பான கருத்துக்களை மேடையின் முன்பு வந்து தெரிவிக்குமாறும், எழுத்து பூர்வமான கருத்துக்கள் இருந்தால் அதனையும் வழங்குமாறும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, திரு. S. சுப்பிரமணியன் கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாக புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் விவரமாக பொதுமக்களுக்கு விளக்கினார். அதனைத் தொடர்ந்து, இத்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. <u>திரு. அந்தோணிச்சாமி, 6வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், வாடியூர்</u>

இப்பகுதியில் கட்டிட தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். மக்களுக்கு தேவையான ஜல்லிகள், எம். சேண்டு ஆகியவற்றை 10 கி.மீ. தொலைவுக்குள் இருக்கும் மக்களுக்கு சிறிய வண்டிகளில் எடுத்து செல்ல ஏதுவாக இருக்கும். அதனால் செலவினங்கள் குறையும். இந்தப் பகுதி ஒரு வானம் பார்த்த பூமியாக உள்ளது. எனவே இத்திட்டத்திற்கு அனுமதி அளித்தால், இப்பகுதி மக்கள் பெரிதும் பயன் அடைவார்கள் என தெரிவித்தார்.

2. <u>திரு. ராம்குமார், பில்டிங் கான்ட்ராக்டர், பாவூர்சத்திரம்.</u>

தாம் மேற்படி குவாரி அமையும் பகுதியை சுற்றியுள்ள ஊர்களில் கட்டுமானத் தொழில் செய்து வருவதாகவும், தற்பொழுது கட்டிடப் பணிகளுக்கு தேவையான மூலப் பொருட்கள் நீண்ட தொலைவில் இருந்து கொண்டு வருவதால் அதிகப் பணம் செலவு ஆவதாகவும், மேற்படி குவாரிக்கு அனுமதி கொடுத்தால் மூலப் பொருட்களின் விலை குறையும் என்றும் அதனால் லாபமும் கிடைக்கும் எனவும், எனவே மேற்படி திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

3. <u>திரு. அருணாச்சலம், மேலக்கலங்கல் கிராமம்</u>

எங்கள் பகுதி வானம் பார்த்த பூமியாகும். எனவே எங்கள் பகுதியில் கல்குவாரி அமைவதற்கு ஊர் மக்கள் அனைவரும் ஆசைப்படுகிறார்கள் எனவும் தெரிவித்தார். மேலும் வெளியூரில் இருந்து மூலப் பொருட்களை கொண்டு வரும் பொழுது அதிக பணம் கொடுத்து வாங்க வேண்டியது உள்ளது. எனவே உள்ளூரில் கல் குவாரி அமைந்தால் மூலப்பொருட்களை விலை குறைவாக வாங்கிக் கொள்ளலாம் எனவும், எனவே மேற்படி கல்குவாரிக்கு கண்டிப்பாக அனுமதி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

4. <u>திரு. பெருமாள் ராஜ், செங்கோட்டை, கட்டிடப் பொறியாளர்.</u>

தாம் சுரண்டை பகுதியைச் சுற்றிலும் பல கட்டிடங்களை கட்டி வருவதாகவும், மூலப் பொருட்கள் கிடைப்பதற்கு தட்டுப்பாடு ஏற்படுவதாகவும், இந்தக் குவாரி அமையும் பட்சத்தில்

மூலப்பொருட்கள் இலகுவாக கிடைக்கும் எனவும், பொதுமக்கள் வேலையில்லாமல் வெளியூர் செல்லும் நிலை இருக்காது எனவும் தெரிவித்தார். உள்ளூரில் பணிகள் இல்லாத காரணத்தினால்தான் பெரும்பாலும் பொதுமக்கள் வெளியூரில் சென்று தங்கி வேலை செய்து வருகிறார்கள். மேற்கூறிய குவாரி உள்ளூரில் அமைந்தால் மிகவும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்தார்.

5. திரு. முத்துத் துரை, மேலக்கலங்கல்.

தமக்கு சொந்த ஊர் மேலக்கலங்கள் கிராமம் எனவும், தற்போது மூலப்பொருட்கள் வாங்குவதற்கு சுரண்டை, சங்கரன்கோவில் ஆகிய ஊர்களுக்கு சென்று எடுத்து வர வேண்டியது உள்ளது என்றும், தற்பொழுது தங்கள் ஊரிலேயே கல்குவாரி அமைய இருப்பதால், அது தங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் எனவும், எனவே மேற்படி கல்குவாரிக்கு அனுமதி வழங்கினால் தங்கள் பகுதி மக்களின் வாழ்வாதரம் மேன்மையடையும் எனவும் தெரிவித்தார்.

6. திரு. பேச்சிமுத்து, கரையாளனூர்

தாம் பல ஆண்டுகளாக வேலை பார்த்து வருவதாகவும், மேற்படி குவாரி அமையும் பட்சத்தில் தன்னைப் போன்ற நிறைய தொழிலாளர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் எனவும் தெரிவித்தார்.

7. திருமதி. மகேஸ்வரி, கரையாளனூர்

மேற்படி கல்குவாரீ அமைப்பதனால் தன்னை போன்ற ஏழை மக்களின் வாழ்வாதரம் உயரும் என்றும், எனவே மேற்படி குவாரி அமைவதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, எழுத்துப்பூர்வமான மனுக்கள் ஏதேனும் அளிப்பதாக இருந்தால், இக்கூட்டத்தில் அளிக்கலாம் என மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தென்காசி அவர்கள் கூறியதைத் தொடர்ந்து மொத்தம் 124 மனுக்கள் பொதுமக்களிடம் இருந்து இக்கருத்துக் கேட்பு கூட்டத்தில் பெறப்பட்டது.

துணை வட்டாட்சியர், வீரகேரளம்புதூர் வட்டம் அவர்கள் கூட்டத்தில் பதிவு செய்யப்பட கருத்துக்கள் ஏதேனும் பொதுமக்களிடம் இருந்தால் அதை வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

வேறு எதுவும் கருத்துக்கள் தெரிவிக்கப்படாததால் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறியவுடன், பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நிறைவு பெற்றது.

11/12/25

**மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்(மு.கூ.பொ),**
**தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,**
**தென்காசி.**

**மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நல அலுவலர்,**
**தென்காசி.**

**இணைப்புகள்:**

1. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) **(இணைப்பு I).**
2. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 14 பக்கங்கள், 137 நபர்கள்) **(இணைப்பு II) .**
3. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு **(இணைப்பு III).**
4. கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் - 124 எண்ணங்கள்**(இணைப்பு IV).**
5. கருத்து கேட்பு கூட்டம் தொடர்பாக இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட மனுக்கள் - 1 எண்ணம்**(இணைப்பு V).**